பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 07 புதன்கிழமை 20.04.2022 கதிர் 166

### இனி இது ரகசியம் அல்ல!

தீர்க்கமான கட்டத்தில் நாடு இன்று நிற்கின்றது. ராஜபக்ஷ குடும்பஆட்சியைமீளக்கொண்டு வந்த சிங்கள மக்களே அவர்களைத் துரத்தியடிப்பதற்குக் கங்கணம் கட்டித் தம் பங்களிப்பை சரியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

2



## ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது

# பொலிஸார் வெறியாட்டம்; 4 பேர் சுட்டுப் படுகொலை!

### 24 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

கேகாலை மாவட்டம், ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 24 பேர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 8 பேர் மக்களின் கல்வீச்சுத் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகள் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

10



பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் சாவடைந்த இளைஞர்கள்

## 21ஆவது திருத்தத்தை எதிரணியே இன்று நாடாளுமன்றில் முன்வைக்கும்

கொழும்பு, ஏப்ரல் 20

ஜனாதிபதியின் கட்டுமட்டில்லா அதிகாரங்களை வெட்டிக் குறைக்கவழிசெய்யும் 21ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கான பிரேரணையை எதிர்க்கட்சிகள் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளன எனத் தெரிகின்றது.

இதற்கான பிரேரணை வடிவத்தைத் தயார் செய்யும் நடவடிக்கை நேற்று இரவிரவாக நடைபெற்றதாக அறிய வந்தது.

வழமையாக எதிரணி இத்தகைய பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தால், அது

10

## பொலிஸ்மா அதிபரின் விளக்கம்

ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின் போது 30,000 லீற்றர் எரிபொருளைக் கொண்ட பௌசருக்கு ஒரு குழுவினர் தீ வைக்க முற்பட்டமையைத் தடுக்கவும், அதனால் ஏற்படக்கூடிய பாரிய சேதங்களைத் தடுக்கவும் பொலிஸார் குறைந்தபட்ச பலத்தை பிரயோகிக்க வேண்டியிருந்ததாக பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

10

## ரம்புக்கனையில் பொலிஸ் ஊரடங்கு

### இராணுவத்தினரும் குவிப்பு

ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ரம்புக்கனையில்

10

## குவிகின்றன கண்டனக்கணைகள்!

### வெளிப்படையான விசாரணைக்கு அமெரிக்கா வலியுறுத்து



ரம்புக்கனையில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைக் கலைப்பதற்கு - கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ள சம்பவத்தை

10

## குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குக

### இ.தொ.கா. கோரிக்கை

ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளின் மீது உடனடி

10

## இலங்கைக்கு உடன் உதவி வழங்குங்கள்

### சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா நேரில் வலியுறுத்தல்



இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இலங்கைக்கு உதவி வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப்

10


## அரசை எதிர்த்து பல பாகங்களிலும் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்!

### களுத்துறையில் ஆரம்பித்த ஜே.வி.பி. பேரணி கொழும்பை வந்தடைந்தது

'மக்களை வதைக்கின்ற அரசை விரட்டியடிப்போம்' என்ற தொனிப்பொருளில் 3 நாள் களாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட பேரணிக்கு தேசிய மக்கள் சக்தியின்

10



## நல்லாட்சி அரசின் காலத்தில் நான் துப்பாக்கியால் பதிலளிக்கவில்லை

### ரம்புக்கனை சம்பவத்துக்கு மைத்திரி கடும் கண்டனம்

எனது தலைமையிலான நல்லாட்சி அரசின் காலத்தில் எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை.

10



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளொரு வண்ணமும் பொழுதொரு சீற்றமுமாக பொதுமக்களின் எதிர்ப்பலை ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் திரண்டு வருகின்றது.

எதிரணி அரசியல்வாதிகளும் தமது கைவரிசையைக் காட்டி, நெட்டித் தள்ளினால்தான் விடயம் ஒப்பேறும்.

ராஜபக்ஷ அரசுக்கு எதிராகத் தாம் சமர்ப்பிக்கவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் சேர்ந்து வெற்றியடையச் செய்வதே களத்தில் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரமடையவைத்து, குடும்பஆட்சியைத் துரத்தியடிக்க வைக்கும். அதற்கு எதிரணி அரசியல் பிரமுகர்கள் தயாரா என்பதுதான் கேள்வி.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் 54 எம்.பிக்கள் தெரிவாகினர். அவர்களில் டயானா கமகே, அரவிந்தகுமார், முஷாரப், இஷாக் ரஹ்மான் உட்பட அறுவர் அரசுப் பக்கம் பாய்ந்து விட்டனர். எஞ்சியோர் 48 எம்.பிக்கள்.

விமல் விரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோரின் தரப்புகள், சுதந்திரக் கட்சியினர் என 39 எம்.பிக்கள் அரசுப் பக்கத்தில் இருந்து நேற்று எதிரணிப் பக்கம் வந்து அமர்ந்துள்ளனர்.

இந்த இரு தரப்பினரையும் சேர்த்தால் 87 பேர். தவிரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 10, ஜே.வி.பி. - 03, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 02, தமிழ் தேசிய மக்கள் கூட்டணி – 01, ஐ.தே.கட்சி - 01 என பதினேழு எம்.பிக்களையும் சேர்த்தால் இப்போது 104 பேர் எதிரணித் தரப்பில் உள்ளனர்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்று வந்தால் இன்றைய நிலையில் இ.தொ.காவின் இரண்டு எம்.பிக்களும் பெரும்பாலும் நடுநிலை வகிப்பர் எனத் தெரிகின்றது.

இந்தப் பின்புலத்தில் இந்தப் பிரேரணையில் எதிரணி வெற்றி பெறுவது என்றால் எஞ்சிய எம்.பிக்களில் குறைந்தது ஏழு அல்லது எட்டுப் பேரை எதிரணி தன் பக்கம் இழுக்க வேண்டும்.

சஜித், விமல், உதய கம்மன்பில்ல, வாசுதேவ, மைத்திரிபால சிறிசேன போன்ற தலைவர்களினால் ஒன்றுபட்டுச் செயற்பட்டு, இப்படி ஒரு பகுதியினரை ஆளும் தரப்பில் இருந்து இழுத்து எடுக்க முடியுமா என்பதே கேள்வி.

அத்திவாரத்துடன் அல்லாடிக் கொண்டிருக்கும் ஆளும் மொட்டுக் கூட்டணியில் இருந்து இன்றைய நிலையில் எம்.பிக்களை வலைவீசி மடக்குவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்கின்றன கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட மூத்த அரசியல்வாதிகள் பலர் மனதுக்குள் குமுறிக் கொண்டிருக்கின்றனர். மூத்தவர்களை விலகும்படி கூறிவிட்டு, பிரசன்ன குணவர்த்தன போன்ற சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருக்கு மட்டும் பதவி அளித்தமையால் பலருக்கும் சீற்றம். கடைசி வரை ராஜபக்ஷக்களோடு நின்று மூக்குடைபட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே போன்றோர் நேற்று நாடாளுமன்றத்துக்கு வரவில்லை. அவர்களை விமல் வீரவன்ஸ, வாசுதேவ போன்றோர் இலகுவாகக் கையாண்டு தம் வசப்படுத்தி விடுவர் என்ற அச்சம் அரசுக்குள்ளேயே இருக்கின்றது.

இன்று நாடாளுமன்றம் கூடும் போது ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் 21ஆவது அரசமைப்புத் திருத்த யோசனையை - அல்லது பிரேரணையை – எதிர்க்கட்சிகளே சமர்ப்பிக்கும் என்று தெரிகின்றது.

எதிர்க்கட்சிகள் இத்தகைய பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தால் வழமையான நடைமுறைகளுக்கு அமைய அது நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரவே ஆறு மாதங்கள் எடுக்கும்.

ஆனால், பிரேரணையை சமர்ப்பிக்கும் எதிர்க்கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இருக்குமானால், அதனைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, இந்தப் பிரேரணையைக் கையாண்டால் ஆறு வாரங்களுக்குள் அந்தப் பிரேரணையைச் சட்டமாக்கலாம் என சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினர்.

நான் இப்பத்தியில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியபடி பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தமது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்து விட்டார். சில சமயங்களில் பிரதி சபாநாயகர் தெரிவு இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறும். அப்போது எதிரணியின் பலம் – அல்லது அரசுத் தரப்பின் வலிமை – நாடாளுமன்றத்தில் அமிலச் சோதனைக்கு உள்ளாகும்.

அதனையடுத்து பல விடயங்கள் தலைகீழாகும் சாத்தியங்களும் உண்டு.

பிரதமர் பதவி கூட ராஜபக்ஷக்களை விட்டு இலகுவில் பறிபோய்விடும் வாய்ப்பும் தாராளமாக உண்டு.

அப்படியான பின்னர், ஜனாதிபதி தமது பதவியை விட்டு இறங்கினால் ராஜபக்ஷ அல்லாத ஒருவர் அக்கதிரையில் அமரும் வாய்ப்பும் உண்டு.

அதனால் அப்படியாவதற்கு முன்னர் ஜனாதிபதி கதிரையை மஹிந்தர் எடுத்து, மைத்திரி, ரணில், சஜித் போன்றோரை ஒன்றிணைத்து, ஓர் இடைக்கால அரசை நிறுவிச் செயற்படுவதற்கு வசதியாக அண்ணனிடம் நேரத்துடன் பதவியைக் கையளிக்குமாறு குடும்பத்துக்குள்ளிருந்தே ஆலோசனை கூறப்பட்டிருப்பதாக நேற்றிரவு ஒரு தகவல் கிடைத்தது. அதன் உண்மைத் தன்மையை உடனடியாக உறுதிப்படுத்த முடியவிலலை. இன்று தான் ‘செக்’ பண்ண வேண்டும்.

இதற்கிடையில் –

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனை ‘எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்’ என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வைத்து ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டமை குறித்து நேற்று என் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

அது தொடர்பில் எனக்கு முதல் தலைமுறையைச் சேர்ந்த – மூத்த ஐயா ஒருவர் – என் ஊரான திருகோணமலையில் இருந்து அழைப்பு எடுத்தார்.

“தம்பி அவர் (சுமந்திரன்) எதிர்க்கட்சிகளினதோ, ஆளும் தரப்பினதோ அல்லது அரசினதோ சட்டமா அதிபர் அல்லர். அவர் ‘தமிழர்களின் சட்டமா அதிபர்’. அதை நான் சொன்னேன் என்று ஒரு தடவை உங்கள் கொலத்தில் பதிவு செய்யுங்கள்” – என அன்புக் கட்டளையிட்டார் அவர்.

அந்த ஐயாவின் ‘தமிழர்களின் சட்டமா அதிபரை’ இன்று மாலை பிரதமரர் மஹிந்த ராஜபக்ஷ சந்திக்கின்றார். தாம் தமது யோசனைத் திட்டமாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க இருக்கும் 21ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கான முன்மொழிவைத் தயாரிப்பது தொடர்பில் சுமந்திரனின் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கான சந்திப்புத்தான் இது என்று தெரிகின்றது.

இதற்கிடையில் –

கொழும்பு காலிமுகத் திடலில் போராட்டம் நடத்துவோரின் விவகாரம் தொடர்பில் நூற்றுக்கும் அதிகமான சட்டத்தரணிகள் ஒப்பமிட்டு பிரதம நீதியரசரிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கின்றார்கள்.

காலிமுகத் திடலில் கூடாரம் அமைத்துப் போராட்டம் நடத்துவோரினால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து பொலிஸாரினால் கொழும்பு கோட்டை நீதிவான் திலங்க கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் ‘ஏ’அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையின் மீது நேற்று நீதிவான் ஏதேனும் உத்தரவை விடுக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே இந்தக் கடிதம் வழங்கப்பட்டிருக்கின்றது.

‘இந்த நீதிவான் நீண்டகாலம் இடைநிறுத்தப்பட்ட பின்னர் இப்போதுதான் பதவிக்கு வந்துள்ளார். அத்துடன் ஆளும் கட்சி அரசியல்வாதியான தினேஷ் குணவர்த்தனவுக்கு மிகவும் நெருக்கமானவர். அரசியல் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட இந்த விடயத்தை அவர் கையாண்டு உத்தரவு கொடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். தேவையானால் கொழும்பு பிரதம நீதிவான் முன்னால் இந்த விடயத்தைக் கையாள்வதற்கு ஒப்படையுங்கள்.” – என்ற சாரப்பட அந்தக் கடிதம் – மனு – அமைந்திருந்ததாகத் தெரிய வந்தது.

இதேசமயம் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நேற்று சம்பந்தனின் வீட்டில் கூடிப்பேசினர். சுகவீனம் காரணமாக சம்பந்தன் கூட்டத்தில் பங்குபறவில்லை. விநோதராதலிங்கம் (ரெலோ) எம்.பி. தவிர ஏனையோர் பங்கு பற்றினர்.

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளை ஒன்றுபட்டு அணுகுவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

அப்படிச் செயற்பட்டால் நல்லது. நடப்பார்களா? பார்ப்போம்!

– மின்னல் –

# பிள்ளையானுக்கும் இராஜாங்க அமைச்சு

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்புக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகல் வழங்கப்பட்டுள்ளது.

## முஷாரப்புக்கும் பதவி

புதிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டது.

அதற்கமைய, புதிதாக 17 அமைச்சர்களும், 24 இராஜாங்க அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்நிலையில், நேற்று மேலும் 3 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். இராஜாங்க அமைச்சர்களின் விவரங்கள்:–

நெசவுக் கைத்தொழில் உள்நாட்டு ஆடை உற்பத்தி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராக முஷாரப் நியமனம்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமனம்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நியமனம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (20.04.2022) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் Bachelor of Construction Technology & Resource Management பட்டம்பெறும் யாழ் மாநகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்

**திரு. இராஜரட்ணம் சிவகுமார்**

B.Tech (2nd Upper)

வாழ்வில் மேன்மேலும் பல வெற்றிகள் பெற்று சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- நண்பர்கள் -




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆறுதல் தரும் அயலுறவு

இலங்கையில் நிலைமை வரவர மோசமடைந்து கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே நாம் இப்பத்தியில் குறிப்பிட்டபடி நாட்டின் பொருளாதார நிலைமை அரசின் கட்டுப்பாட்டை மீறிக் காலம் கடந்து விட்டது.

மீண்டும் எரிபொருள் விலை உயர்வு. மா விலை எகிறுகின்றது. அதனால் பாமரனின் ஒரு நேரப் பசிக்கு உணவாகும் பாண் விலை கூட எட்டா உயரத்துக்கு உயர்ந்துள்ளது.

தினசரி ஒரு நேரப் பட்டினி என்ற நிலைமை, இனி நாளுக்கு ஒரு நேரம் மட்டுமே உணவு என்றாகும் கட்டத்தை நோக்கி முன்னேறுகின்றது.

ரூபாவின் பெறுமதி கிள்ளுக் கீரையாகி வருகின்றது. வெளிச் சந்தையில் டொலரின் பெறுமதி 385 ரூபாவைத் தொட்டு நிற்கின்றது. அது அடுத்த வாரத்துக்குள் நானூறு ரூபாவைத் தாண்டும்.

இவ்வளவும் மோசமான நிலையில் கடந்த காலத்தில் இரண்டு விடயங்களில் மட்டும் தவறிழைத்து விட்டேன் என்று 'தத்துவம்' பேசுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஒன்று – அசேதன, இரசாயன உரங்களைத் தடை செய்தமை; மற்றையது – சர்வதேச, நாணய நிதியத்தின் உதவியை நாடுவதைத் தவிர்த்தமை.

இந்த இரண்டு நடவடிக்கைகளிலும் கூட தவறிழைக்கப்பட்ட காலத்தில் பல தரப்புகளும் திரும்பித் திரும்பி அதனைச் சுட்டிக்காட்டியே வந்தன.

ஆனால் எகத்தாளத்தில் திமிர்த்தனமாக – எதேச்சாதிகாரமாக – அதிகார வெறி மமதையோடு – நடந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ அவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்கவேயில்லை.

இரசாயன உரங்களைத் தடுத்த போது இது மிக முட்டாள்தனமாக – உலக மகா முட்டாள்தனமான – முடிவு என்றும், விளைவுகள் விபரீதமாக அமையும் என்றும் இப்பத்தியில் நாமே பல தடவைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டியிருந்தோம். இலங்கையின் நிபுணத்துவ தரப்புகள் எல்லாம் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டவும் அதையும் மீறி முரட்டுத்தனமான போக்கில் நடந்து கொண்டு நாட்டை நடுவீதிக்குக் கொண்டு வந்திருக்கின்றார் நாட்டின் தலைவர்.

யுத்தத்தைக் கூட அவர் வெறி கொண்டுதான் நடந்தார். அதனால் பேரழிவுகளுக்கு மத்தியில் அவர்களுக்கு வெற்றி கிட்டியது. ஆனால் அழிவோ தமிழர் தேசத்துக்கு. அதனால் சிங்களமும் உலகும் பாராமுகமாக நடந்து கொண்டன. நாட்டை நிர்வகிப்பதிலும் கூட அதே போன்ற எதேச்சாதிகார வெறிதான். இதன் விளைவு முழு நாட்டுக்கும் அழிவு. அதனைத் தாங்க முடியாது சிங்களமும் எங்களுடன் சேர்ந்து ஓலக் குரல் எழுப்புகின்றது.

இரும்புச் சட்டகச் சிறை போல தமிழர் தேசத்தை மூடி வைத்துக் கொண்டு தமது போர் வெறியை அதன் மீது ஏவிட்டனர் ராஜபக்ஷக்கள். அதனால் அந்தப் பேரழிவுகள் பற்றிய உண்மைகள் சர்வதேச நீதிமன்றங்களில் இன்னும் அம்பலப்படுத்தப்படாமல் மௌனித்துக் கிடக்கின்றன.

ஆனால், நாட்டு நிர்வாகத்தில் அவர்களது எதேச்சாதிகார வெறிப் போக்கு திறந்த புத்தகமாக அம்பலமாகின்றமையால் அவர்களின் கீர்த்தி சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளது.

கழுத்தை நெருக்கும் இந்தச் சமயத்தில் இந்தியா விரைந்து வந்து 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற மாதிரி உதவுகின்றமையால் இலங்கை மக்கள் சிறிதேனும் மூச்சு விடுகின்றனர். இந்தியாவின் எரிபொருள் விநியோகத்தினால் மின்வெட்டு ஒரு சில மணி நேரத்துடன் குறைந்துள்ளது. அவசர, அவசிய உதவிகளை இந்தியா வழங்கியமையால் நெருக்கடி சற்றுத் தளர்ந்துள்ளது.

போதாக்குறைக்கு இலங்கைக்கு உதவும்படி சர்வதேச நாணய நிதியத்தை இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேரில் கோரியிருக்கின்றார்.

இன்றைய நிலையில் நெருக்கடியில் இருக்கும் இலங்கைக்கு ஒரே ஆறுதல் அயல்தேசமான இந்தியாவும் அதன் நல்லுறவும்தான்.

## 20 ஆம் திருத்தத்துக்கு கைகளை உயர்த்தியோர் கைகூப்பி மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்

### மனோ கணேசன் கோரிக்கை



20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதீத அதிகாரங்களை கொடுத்து, அதை நியாயப்படுத்தியும் பேசிய எம்.பிக்கள், அதே கைகளை உயர்த்தி வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய நிலைமை இன்று உருவாகிவிட்டது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'20 ஐ அகற்றிக்கொண்டு 19 இன் அம்சங்களை உள்வாங்கி 21 ஆம் திருத்தத்தை கொண்டுவர அரசு இணங்கியுள்ளதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்தார்.

இவ்வளவு சீக்கிரம் கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வதிகாரம் வீழும் என இவர்கள் கற்பனையிலும் நினைத்து இருக்க மாட்டார்கள்.

நாடாளுமன்ற வாளாகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், 20 ஐ அகற்றவும், 19 இன் அம்சங்களை உள்வாங்கி 21 ஆம் திருத்த வரைவு ஒன்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவும் அரசாங்கம் தயார் என சபை முதல்வர் தினேஷ் குணவர்தன அறிவித்தார். இதை பிரதான எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றும் யோசனையும் தனக்கு கிடைத்ததாக சபாநாயகர் கட்சி தலைவர்களுக்கு கூறினார். எனினும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட சர்வஜன வாக்கெடுப்பு நடத்திட வேண்டிவரும் என்பதால், அதற்கு நாடு இன்றைய சூழலில் தயார் இல்லை என்பதால், முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்சமயம் அகற்ற பெரும்பாலான கட்சித் தலைவர்கள் ஆதரவு வழங்கவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட்டால், விகிதாசார தேர்தல் முறைமை, 13 ஆம் திருத்த மாகாணசபைகள் ஆகியவற்றையும் அகற்ற வேண்டி வரும் என சில ஆளும்கட்சி பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

இது தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு ஏற்புடைய நிலைப்பாடுகள் இல்லை. தமது நிலைப்பாடும் இதுவே என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் நண்பர் ரிஷாத் பதியுதீன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் என்னிடம் தெரிவித்தார்கள். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெற்றோல் விலை எகிறல்; வெள்ளவத்தையில் பதற்றம்

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபம் அறிவித்திருந்த நிலையில், கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

திங்கள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஒக்டேன் (92) பெற்றோல் லிற்றர் 338 ரூபாவாகவும், ஒக்டேன் (95) லீற்றருக்கு 373 ரூபாவாகவும், ஓட்டோ டீசல் லிற்றர் 289 ரூபாவாகவும், சூப்பர் டீசல் லிற்றர் 329 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், வெள்ளவத்த மெரைன்டரைவ் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கூடியிருந்தவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நிலையில் தமக்கு பழைய விலையில் எரிபொருள் வழங்க வேண்டும் என அங்கு கூடியிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தமையுடன், குழப்பத்திலும் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் இரவு ஒன்பது மணி முதல் வரிசையில் காத்திருக்கின்றோம் எனவும் தற்போது திடீரென விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பதற்றம் ஏற்பட்டதுடன், பொலிஸார் வரவழைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஊழல் மோசடிமிக்க குடும்ப ஆட்சியை விரட்டுவதை தவிர மாற்று வழியில்லை

### விஜித ஹேரத் காட்டம்

ஊழல் மோசடி மிக்க குடும்ப ஆட்சியை விரட்டியடிப்பதைத் தவிர்ந்த வேறு மாற்று வழிகள் எதுவும் கிடையாது என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குடும்ப ஆட்சியை விரட்டியடிப்பதைத் தவிர சீட்டுக்கட்டையின் சீட்டுக்களை அங்கும் இங்கும் கலைப்பதால் மக்களின் எரியும் பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வு கிட்டப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அமைச்சரவை நியமனத்தின் மூலம் அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை முட்டாளாக்க எத்தணிக்கின்றது என்பதே தெளிவாகின்றது என அவர் கூறியுள்ளார்.



நாட்டு மக்கள் வீதியில் இறங்கி ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவி விலகக் கோரும் நிலையில் அவர்கள் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடி வருகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊழல்மோசடிமிக்க இந்த அரசாங்கத்தை முழுமையாக விரட்டியடித்து விட்டு மக்கள் நலனை முதன்மையாகக் கொண்ட அரசாங்கமொன்றை ஆட்சிப்பீடமேற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் விலை அதிகரிப்புக்கெதிராக நாட்டின் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம்





இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரி பொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளதன் காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் தனியார் பயணிகள் பஸ்கள் சேவையில் இருந்து விலகிக்கொள்ளப் பட்டுள்ளன என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலையில் நாட்டின் பல பிரதேசங்களில் தனியார் பயணிகள் பஸ்கள் சேவைகளில் இருந்து விலகிக்கொள்ளப் பட்டுள்ளன என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். அதேவேளை காலி நகரில் காலி – கொழும்பு – மாத் தறை பிரதான வீதியில் போக்குவரத்துக்கு தடையேற்பட்டுள்ளது. காலி நகரில் நடத்தப்படும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக அங்கு போக்குவரத்துக்குத் தடையேற்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரி பொருள் விலைகளை அதிகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

காலியில் மாத்திரமல்லாது, எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஹிங்குரக்கொடை, பத்தேகம, திகணை, மாதம்பை, கம்பளை, கண்டி, கேகாலை, மத்துகமை நகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## நஸீருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடுகின்றது மு.காங்கிரஸ்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடம் எதிர்வரும் 22 ஆம் திகதி உத்தி யோகபூர்வமாக ஒன்றுகூடி, நஸீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முழுநாடும் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீண்டுமொரு தடவை மீறிக்கொண்டு அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட நஸீர் அஹமட் தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நஸீர் அஹமட் உட்பட 4 உறுப்பினர்களையும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டமை மிகவும் மோசமான செயல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் கடன் மதிப்பீட்டை குறைத்துள்ளது மூடிஸ் நிறுவனம்

மூடிஸ் நிறுவனம் இலங்கையின் கடன் மதிப்பீட்டை 'சிஏ2' இலிருந்து 'சிஏ' ஆகக் குறைத்துள்ளது. கடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து மூடிஸ் நிறுவனம் இலங்கையின் இறையாண்மை மதிப்பீட்டை குறைத்துள்ளது.

தன்னுடைய கடன்களை உரிய காலத்தில் செலுத்த முடியாது என இலங்கை அண்மையில் அறிவித்திருந்தது. இவ்வாறு கடன் தவணை தவறுவது, 'ஒரு நாடு திவாலான நிலைமை' என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பொருளாதார வீழ்ச்சியால் இலங்கை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. விலைவாசி உயர்ந்திருக்கிறது. அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. நாணயத்தின் மதிப்பு கடுமையாகச் சரிந்திருக்கிறது.

இறக்குமதிகள் முடங்கியிருக்கின்றன. இறக்குமதியை நம்பியிருக்கும் தொழில்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில், கடனை உரிய காலத்தில் மீளச் செலுத்த இயலாது என இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே, மூடிஸ் நிறுவனம் இலங்கையின் கடன் மதிப்பீட்டை 'சிஏ2' இலிருந்து 'சிஏ' ஆகக் குறைத்துள்ளது.

இலங்கை 5 கோடியே 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் கடன் செலுத்த வேண்டியுள்ளது. இதில் சுமார் 3 கோடியே 50 லட்சம் டொலர்கள் வரை கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைத் தள்ளி வைத்திருக்கிறது இலங்கை.

இந்த ஆண்டிலேயே சுமார் 70 லட்சம் அமெரிக்க டொலர் கடன்களை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் இலங்கையிடம் இப்போது 193 கோடி அமெரிக்க டொலர்கள் மட்டுமே கையிருப் பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவே புதிய அமைச்சரவை

### கனக ஹேரத் இப்படிக் கருத்து



புதிய அமைச்சரவையின் நோக்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதுமாகும் என புதிய நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை, கொஸ்வத்தையில் அமைந்துள்ள மக நெகும மஹாமெதுர வளாகத்தில் அமைந்துள்ள அமைச்சின் காரியாலயத்தில் கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் ஊழியர்களிடம் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

எமது வரலாற்றில் முதல் முறையாக, நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரத்தில், ஓர் அரசாங்கமாக நாங்கள் பல பெரிய சவால்களை எதிர்கொள்கிறோம். அரசாங்கத்தின் முதன்மையான கவனம் நாட்டை முன்னோக்கி வழிநடத்துவது மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதாகும், மேலும் நாங்கள் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உழைக்க வேண்டும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது, புதிய உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது மற்றும் ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்துவது புதிய அமைச்சரவையின் நோக்கமாகும். இதில் நெடுஞ்சாலைத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எத்தனை சவால்கள் வந்தாலும் வளர்ச்சியையும் முதலீட்டையும் கைவிட முடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் வெற்றியடைய அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். – என்றார்.

## மக்கள் போராட்டத்துக்கு ஆதரவாக பல்கலை விரிவுரையாளர்களும் பேரணி!

கொழும்பு, ஏப். 20

கொழும்பு – காலி முகத்திடலில் அரசுக்கு எதிராக நடத்தப்படும் பொதுமக்களர் போராட்டத்துக்கு ஆதரவுதெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அடையாளப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது.

பொது மக்களின் வாழ்வுரிமைக்காக காலி முகத்திடலில் நடாத்தப்படும் போராட்டத்துக்கான தமது தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்பு பல்கலைக்கழக முன்றிலில் இருந்து காலி முகத்திடல் நோக்கி இந்த அடையாளப் பேரணி நடைபெற்றது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளம் அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் அதனையண்டிய பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நேரடியாக இந்த அடையாளப் பேரணியில் கலந்து கொண்டனர் எனவும், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் அதே காலப்பகுதியில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் அடையாளப் போராட்டமொன்றை நடத்தினர் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானில் கொடூரகொலை செய்யப்பட்ட இலங்கையர் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்த நீதிமன்றம்

பாகிஸ்தானில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட இலங்கை பிரஜையான பிரியந்த குமார வின் மீதான கும்பல் தாக்குதல் வழக்கில் பாகிஸ்தானின் லாகூர் நீதிமன்றம் ஆறு பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளதுடன் மேலும் ஏழு பேருக்கு ஆயுள் தண்டனையும் 76 பேருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதித்து உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராக பிரியந்த குமார பணியாற்றி வந்துள்ளார்.

கடந்த 2021 டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி இலங்கையரான பிரியந்த குமார இஸ்லாமுக்கு எதிராக மத நிந்தனை செய்தார் என குறித்த தொழிற்சாலையின் ஊழியர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். அத்துடன், அவர் உயிருடன் எரிக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. மேற்படி சம்பவம் தொடர்பில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், பாகிஸ்தானின் லாகூர் நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

# பஸ் சேவைகள் இடம்பெறவில்லை ஹற்றனில் பயணிகள் போராட்டம்





எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, அத்தோடு பல்வேறு இடங்களில் வீதியை மறித்து போராட்டம் இடம்பெறுவதால் ஹற்றனில் இருந்து தூர பிரதேசங்களுக்கு செல்லும் சில பஸ் போக்குவரத்து சேவைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெறவில்லை.

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர். எனவே உடனடியாக இதற்கு தீர்வை பெற்றுத் தரக் கோரி, ஹற்றனில் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

ஹற்றன் பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அண்மித்த வளாகத்தில் பொது மக்கள் மற்றும் பயணிகள் இந்த போராட்டத்தை நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் மாலை வரை நடத்தினர்.

அரசாங்கத்தால் நாளுக்கு நாள் எரிபொருளின் விலை தன்னிச்சையாக அதிகரிக்கப்படுவதாகவும், அவ்வாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கத்தை விட்டு வெளியே செல்ல வேண்டும், கோட்டா கோ ஹோம், கோட்டா பைத்தியம் என்ற பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதேவேளை, பிரதான பஸ் மார்க்கத்தை மறித்து நடத்தப்படும் போராட்டம் காரணமாக, கொழும்பு, கண்டி, நுவரெலியா, பொகவந்தலாவ, மஸ்கெலியா உள்ளிட்ட தூர பிரதேசங்களுக்கு செல்வதற்கு வருகை தந்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

## அரச புலனாய்வு சேவை முன்னாள் பணிப்பாளரே ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்பு

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டியவர் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன என ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் விசாரணை தொடர்பாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக முன்கூட்டியே தகவல் கிடைத்தும் இது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்காதமை தொடர்பாக நிலந்த ஜயவர்தன பொறுப்புக் கூற வேண்டும்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த நிலந்த ஜயவர்தன, இந்திய புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து ஏப்ரல் நான்காம் திகதி கிடைத்த தகவல், தகவல் மாத்திரமே எனவும் புலனாய்வு தகவல் அல்ல எனக் கூறினார்.

இதன் பின்னர் பொலிஸ் மா அதிபர், சீ.என்.ஐ. ஆகிய தரப்புக்கு ஏப்ரல் 7 ஆம் திகதி கடிதம் அனுப்பியுள்ளார். ஏப்ரல் 9 ஆம் திகதி இது சம்பந்தமாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்குமாறு கூறி சிசிர மெண்டிஸ் அறிக்கை ஒன்றுடன் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த கடிதத்துக்கு அமைய அன்றைய பொலிஸ் அதிபர் செயற்பட்டுள்ளமையுடன் அனைத்து இடங்களுக்கு அது பற்றி அறிவித்துள்ளார்.

நான் குறுக்கு விசாரணை செய்யும் ஏப்ரல் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கே இது புலனாய்வு தகவலாக மாறியது என நிலந்த ஜயவர்தன கூறினார். எப்படி அது புலனாய்வு தகவலாக மாறியது என்று நான் கேட்ட போது, ஏப்ரல் 4 ஆம் திகதி தகவல் அனுப்பியவர் ஏப்ரல் 20 ஆம் திகதி வட்ஸ் அப் தகவலை அனுப்பினார் எனச் சொன்னார்.

அப்போது ஏப்ரல் 4 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 20 ஆம் திகதி வரையான காலத்தில் நீங்கள் உங்களது அதிகாரிகளை பயன்படுத்தி உறுதிப்படுத்தஏதேனும்நடவடிக்கைகளை எடுத்தீர்களா என கேட்டேன். இல்லை என்று பதிலளித்தார்.

ஏப்ரல் 9 ஆம் திகதி புலனாய்வு மீளாவுக் கூட்டத்தில் ஏன் தகவலை வெளியிடவில்லை என்று கேட்டதற்கு, சிசிர மெண்டிஸிடம் அதனை செய்யுமாறு கூறினேன் என தெரிவித்தார்.

அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளரே புலனாய்வு மீளாய்வு கூட்டத்தில் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை ஆரம்பித்து வைப்பார். எனினும் நிலந்த ஜயவர்தன அதனை செய்யவில்லை.

தவறுதலாக இதனைத் தெரிவித்து, நாட்டை மூடி, ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்காவிட்டால், தனக்கு வீட்டுக்கு செல்லநேரிட்டிருக்கும்எனவும்அவர் கூறினார். ஓர் அதிகாரியின் தவறு காரணமாக நாட்டில் சுமார் 250 பேரின் உயிர்கள் பறிபோயின. 500 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஏப்ரல்நான்காம்திகதிகிடைத்தது தகவலை புலனாய்வு தகவலாக எடுத்துக்கொள்ளவில்லை என்பதால், இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக அனைவரும் கூறுகின்றனர்.

இதனால், ஈஸ்டர் தாக்குதலுக்கு நிலந்த ஜயவர்தனவே முற்றாக பொறுப்புக் கூற வேண்டியவர் எனவும் மொஹான் வீரகோன் தெரிவித்துள்ளார்.

## முன்னையவர்களுக்கு இல்லாத முதுகெலும்பு கோட்டாவுக்குண்டு!

### மஹிந்தானந்த அளுத்கமகே பெருமிதம்



தாம் தவறு செய்தமையை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஜனாதிபதிக்கு முதுகெலும்பு இருப்பதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இரசாயன பசளை இறக்குமதிகளை ரத்துச்செய்தமை தொடர்பில் ஜனாதிபதி மன்னிப்பு கோரியமை தொடர்பிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

மத்திய வங்கி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக மன்னிப்பை கோர முன்னைய அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது விவசாயிகளுக்கு நட்டஈடுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மஹிந்தானந்த அளுத்கமமே நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிடடுள்ளார்.

நாட்டில் இன்று ஏற்பட்ட நிலைமையை 225 பேரும் இணைந்தே தீர்க்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பூபதிக்கு நாடாளுமன்றில் சாள்ஸ் எம்.பி. அஞ்சலி!

அன்னை பூபதிக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கையின் நாடாளுமன்றில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது ஜனநாயக வழியில் நின்று போராடிய அன்னை பூபதிக்கு தமது அஞ்சலியை செலுத்துகிறேன் என குறிப்பிட்டார்.

திலீபனின் உணவுத்தவிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவளித்தே அன்னை பூபதி தமது போராட்டத்தை ஆரம்பித்தார் என்று நிர்மலநாதன் குறிப்பிட்டார்.

## 4 ஆவது டோஸ் தடுப்பூசி ஏற்றுவதற்குத் திட்டம்!

இலங்கை மக்களுக்கு எதிர்வரும் காலத்தில் கொரோனா தடுப்பூசியின் நான்காவது டோஸை செலுத்துவதற்கு திட்டமிடப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சராக திங்கட்கிழமை பொறுப்பேற்ற சன்ன ஜயசுமன இதனை அறிவித்துள்ளார்.

இதேவேளை, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, வளாகம் ஒன்றுக்கு செல்லும் போது உடல் வெப்பநிலையை பரிசோதித்தல் மற்றும் தனிநபர் விவரங்களைத் திரட்டுதல் என்பன கட்டாயம் இல்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோதுமைமாவின் விலை மேலும் எகிறுகின்றது!

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 40 ரூபாவால் அதிகரிக்க பிரீமா நிறுவனம் அதன் விற்பனை முகவர்களுக்கு அறிவித்துள்ளது.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக பிரீமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் எகிறின!

நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாண் மற்றும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன.

அதற்கமைய, ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ள நிலையில் பாண் ஒன்றின் புதிய விலை 140 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அவ்வாறே, ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளன என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை கொத்து உள்ளிட்ட மதிய உணவுப் பொதிகளின் விலையும் 20 விகிதத்தால் அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



# அரசமைப்புத் திருத்தங்கள்; ‘ஏணியும் பாம்பும்’ விளையாட்டு

* ‘19’ இற்கு புத்துயிர் கொடுக்க வருகிறது ‘21’
* பஸிலின் எம்.பி. பதவியும் பறிபோகும் நிலை
* 19+ வேண்டும் என்கிறது எதிரணி
* 20 ஐ ஆதரித்த 9 தமிழ் எம்.பிக்கள் என்ன செய்ய போகின்றனர்?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்தும் நோக்கில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தை முன்வைப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

இந்தத் தகவலை பிரதமரின் ஊடகப்பிரிவு திங்களன்று உறுதிப்படுத்தியது.

“நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை மற்றும் நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய வகையில் அரசமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் எதிர்பார்த்துள்ளார். – என பிரதமரின் ஊடகப்பிரிவு விடுத்திருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது அமுலில் உள்ள 20 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கிவிட்டு அல்லது பரந்தளவில் மறுசீரமைப்பு செய்துவிட்டு, 19 இல் இருந்தவாறு ஜனாதிபதிக்கான அதிகாரங்களை வழங்குவதற்கு பிரதமரால் 21 ஆவது சட்டமூலம் கொண்டுவரப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் திங்களன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கிவிட்டு, மீண்டும் ‘19’ என்ற நிலைக்கு செல்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

‘20’ ஐ முழுமையாக நீக்கிவிட்டு, 19 ஐ அமுல்படுத்தும் திட்டமே அவசியம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அதற்கேற்ற வகையிலேயே 21ஆவது திருத்தச் சட்டமூலம் வர வேண்டும். மாறாக தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் மேற்படி திருத்தம் அமையக்கூடாது எனவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. தனிநபர் வசம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. நாடாளுமன்ற ஜனநாயகம் கேள்விக்குறியாக்கப்பட்டது. நாடாளுமன்றத்தை ஒரு வருடத்தில் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது.

இந்நிலையில் 18 ஆவது திருத்தச்சட்டமூலம் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான பலத்தை மஹிந்த ராஜபக்ஷ மேலும் அதிகரித்துக் கொண்டார்.

* ஜனாதிபதியொருவர் 2 தடவையே அப்பதவியை வகிக்கலாம் என்ற வரையறை மாற்றியமைக்கப்பட்டது. அந்தவகையிலேயே 2015 ஜனாதிபதித் தேர்தலில் அவர் மூன்றாவது தடவையும் போட்டியிட்டார்.

* 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கும், சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை பகிரும் வகையிலும் 19 ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டது. உயர்நீதிமன்ற திருத்தங்களையும் உள்வாங்கி, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத வகையில் அச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

* சரத் வீரசேகரவைத் தவிர, ஏனைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் 19 இற்கு சார்பாக வாக்களித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று, நான்கரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். இதன்மூலம் ஒரு வருடத்தில் கலைக்க முடியும் என்ற ஏற்பாடு 19 ஊடாக நீக்கப்பட்டது.

* 2018 இல் அரங்கேறிய 52 நாள்கள் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சியின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைத்தபோது, அது சட்டவிரோதம் என உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

* 19 இன் பிரகாரம் ஜனாதிபதியால் தன்னிச்சையான முறையில் உயர்பதவிகளுக்கான நியமனங்களை வழங்கமுடியாது. அரசமைப்புப் பேரவையின் அனுமதி அவசியம். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோர் இப்பேரவைக்கு பதவிவழி உறுப்பினர்கள். சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மூவரும் உள்வாங்கப்பட்டனர்.

* ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதெல்லை 30 இல் இருந்து 35 ஆக்கப்பட்டது.

* அமைச்சரவை எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. 30 அமைச்சர்களையும், 40 இராஜாங்க அமைச்சர்களையும் மட்டுமே நியமிக்க கூடியதாக இருந்தது. தேசிய அரசு அமையும் பட்சத்தில் அமைச்சரவை எண்ணிக்கையை 45 வரை அதிகரித்துக் கொள்ள முடியும்.

* பிரதமருடன் கலந்துரையாடிவிட்டே அமைச்சரவை தொடர்பான நியமனங்களை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

* இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்பட்டது.

(இதன்படி இரட்டைக் குடியுரிமை கொண்டிருந்த கீதா குமாரசிங்கவுக்கு எம்.பி. பதவியை இழக்க வேண்டி ஏற்பட்டது. இரட்டைக் குடியுரிமையை துறந்த பின்பே அவர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.)

* சுயாதீன ஆணைக்குழுக்கள் உட்பட பல ஜனநாயக அம்சங்கள் 19 இல் இருந்தன. நிறைவேற்று, சட்டவாக்கம் ஆகியவற்றுக்கிடையில் அதிகாரப்பகிர்வு இருந்தது. ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டியவராக இருந்தார். சட்டரீதியில் ஜனாதிபதியின் செயற்பாடுகளை சவாலுக்குட்படுத்தும் ஏற்பாடுகளும் இருந்தன.

* 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்ற பிறகு, 19 ஐ நீக்கிவிட்டு 20 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

* நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

* நாடாளுமன்றத்தில் உள்ள 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 19 பேர் ‘20’ இற்கு எதிராக வாக்களித்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள், அரவிந்தகுமார் உட்பட 9 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

* 19 இல் இருந்த சில ஏற்பாடுகள் 20 இலும் தக்கவைக்கப்பட்டன. ஒரு சிலவற்றைதவிர ஏனையவை மாற்றப்பட்டன.

அந்தவகையில் –

* நான்கரை வருடங்களுக்கு பிறகு, நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்பது ஒரு வருடம் ஆக்கப்பட்டது. எதிர்ப்புகள் வலுத்தால் அது இரண்டரை வருடமாக்கப்பட்டது. நாடாளுமன்றம் விரும்பினால், தீர்மானமொன்றை நிறைவேற்றி, உடனடித் தேர்தலுக்குச் செல்லலாம்.

* அரசமைப்பு பேரவை நீக்கப்பட்டு, நாடாளுமன்ற பேரவை உருவாக்கப்பட்டது. உயர்பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி வழங்கலாம்.

* அமைச்சர்களை தனக்கு ஏற்ற வகையில் நியமிக்கலாம். எனினும், அமைச்சரவை வரையறை 19 இன் பிரகாரமே காக்கப்பட்டது.

* ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என்ற நிலை மாற்றப்பட்டது. நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் தன்மையும் அகற்றப்பட்டது.

* ஜனாதிபதியொருவர் இரு தடவைகள்தான் அந்தப் பதவியை வகிக்கலாம் என்ற வரையறையும் தக்கவைத்துக்கொள்ளப்பட்டது.

* இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் செல்ல முடியாது என்ற ஏற்பாடு நீக்கப்பட்டது. இதன் அடிப்படையில்தான் இரட்டைக் குடியுரிமை கொண்ட பஸில் ராஜபக்ஷ தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்தார்.

* எனவே, 20 ஆவது திருத்தச்சட்டம் திருத்தப்பட்டு, பழைய ஏற்பாடுகளின் பிரகாரமே 19 மீண்டும் அமுலுக்கு வந்தால் பஸில் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க நேரிடும்.

* ‘20’ இல் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்ற அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. திருத்தம் மேற்கொள்ளப்படும் என்பது பற்றி மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது.

* பிரதமர் அமைச்சரவையில் சட்டமூலத்தை முன்வைத்த பிறகு, உரிய சட்ட நடவடிக்கைகளின் பின்னர் அமைச்சரவை அனுமதி வழங்கும். அதன்பின்னர்அதுவர்த்தமானியில்வெளியிடப்படும்.

அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இது தொடர்பில் உயர்நீதிமன்ற தீர்ப்பு வந்ததும், நாடாளுமன்றத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும்.

# 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் படையினரால் முல்லைத்தீவில் நில அபகரிப்பு நடந்துள்ளது

## ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலங்களைப் படையினர் ஆக்கிரமிப்பு செய்தி ருக்கின்றார்கள் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –


தமிழர் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான படையினர் குவிப்பும், படையினரின் அடக்கு முறைகள், நிலப்பறிப்புக்கள், படையினர் தமக்கேற்ற விதத்தில் புத்தமத திணிப்புக்கள், வியாபார நடவடிக்கைகள் என வட பகுதியில் படையினர் சம்பந்தமான குவிப்புக்களும், படையினரின் ஆதிக்கங்களும் ஏராளம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலங்களைப் படையினர் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள்.

அளம்பிலில் தனியார் காணியை அபகரித்து தோட்டச்செய்கையிலும், கிரீன் ஜெக்கெட் எனும் பெயரில் செம்மலையில் சுற்றுலா விடுதியும், புதுக்குடியிருப்பில் மரக்கறி செய்கை பண்ணை சிவில் பாதுகாப்பு திணைக் களத்தினரும், கோம்பக சந்தி என்று கூறப்படும் வேம்படி சந்தியில் பல ஏக்கர் காணி அபகரிப்பும் தோட்டச்செய் கையுடன் பொது விற்பனை தளம் என பலவாறாகப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைவிடப் படையினருடைய அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. 2021.10.05 அன்று கொவிட் காலத்தில் இராணுவம், தொல்லியல் திணைக் களத்தினர், பௌத்த துறவிகள் ஒன்று கூடி பிரித் தோதலை இராணுவ விழா போல் மேற்கொண்டிருந் தார்கள்.

இதனைவிட 2022.03.19 அன்று பிரதமர் யாழ். விஜயத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பிரதமரிடம் சென்று தமது உறவுகளது நிலை பற்றிக் கேட்கச்சென்ற போது வாகனத்தை வழிமறித்தது மட்டுமல்லாமல் பெண்மணிக்கு நடந்த அட்டூழியங்கள் அனைவருக்கும் தெரிந்ததே.



தமிழ் சகோதரிகள் போராட வெளிக்கிட்டால் இப்படி தான் நடக்கும் என அன்றைய சம்பவத்திலும் படை யினர் காட்டி விட்டனர். இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக பல்வேறு அடையாள, கவனவீர்ப்பு போராட் டங்கள் நடத்தி வருகின்றோம்.

அச்சுறுத்தும் விதமாகப் புலனாய்வாளர்களின் நடவடிக்கை, இராணுவம் குவிக்கப்படுதல், பொலிஸார் வழக்குப்பதிதல் என ஏராளம். – இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

# 20 லட்சம் டொலர்களை கப்பம் செலுத்தி அமைச்சர்களை நியமித்த அரசாங்கம்!

## நளின் பண்டார சாடல்

இலங்கையில் நேற்றுமுன்தினம் பதவியேற்ற அமைச்சர்களில் 5 இராஜாங்க அமைச்சர்களுக்கு அ ரசாங்க கட்சி 20 லட்சம் டொலர் செலுத்தியுள்ளதாக நாடாளுமன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாடாளுமன்றில் நேற்று இந்த தகவலை ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண் டார வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியி டவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன்று பொதுமக்களுக்கு மருந்துகள் இல் லாத நிலையில் அரசாங்கம் தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள ஓர் உறுப்பினருக்கு 20 லட்சம் டொலர்களை வழங்கியமை மனித கொலைக்கு ஒப் பான விடயம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தென்னிந்திய திரையுலகில் கலக்கும் ஈழத்தமிழ் சிறுவன்

சூர்யா – ஜோதிகாவின் தயாரிப்பில் தென்னிந்திய நடிகர் அருண் விஜய் அவரின் மகன் ஆர்னவ் விஜய் மற்றும் அருண் விஜயின் தந்தை விஜயகுமார் எனமூன்றுதலைமுறைஇணைந்து நடிக்கும் திரைப்படம் ஓ மை டோக்.



செல்லப்பிராணியான நாய்க் கும் சிறுவனுக்கும் இடையில் நடக்கும் பாசப்பிணைப்பை பற் றிய படமாக இது இருக்கலாம் என எதிர்பாக்கப்படும் நிலை யில், இந்தத் திரைப்படத்தில் இடம்பெறவிருக்கும் இற்ஸ் மை கின்டா டே என்ற பாடல் அண்மையில் யூ டியூப்பில் வெளி யாகி லடசக்கணக்கான பார்வையாளர்களைக் கடந்து வெற்றி நடை போடுகிறது.

சூப்பர் சுப்பு வரிகளை எழுத, நிவாஸ் கே பிரசன்னா இசை யமைத்திருக்கும் இப்பாடலை அஜீஸ் சிவகுமார் பாடியுள்ளார்.



# புதையல் தோண்டலில் ஈடுபட்ட நால்வர் வவுணதீவில் கைது!

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள இரட்டைச் சோலைமடு பிரதேசத்தில் பண்ணை ஒன்றில் புதையல் தோண் டும் நடவடிக்கையில் ஈடுபட்ட பகுதியை பொலிஸார் திங்கட்கிழமை மாலை முற்றுகையிட்டனர் இதன்போது 4 பேரை கைது செய்துள் ளமையுடன் ஒருவர் தப்பி ஓடியுள்ளார் எனவும் புதையல் தோண்டு வதற்கு பயன்படுத்திய துளையிடும் கருவி உட்பட உபகரணங் களை மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி சாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து வவுணதீவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப் பதிகாரி தலைமையிலான பொலிஸாருடன் விசேட புலனாய்வு பிரிவினரும் இணைந்து சம்பவதினமான திங்கள் மாலை பண்ணை பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் தப்பி ஓடியமையுடன் 4 பேரை கைது செய்தனர் இவர்களிமிருந்து துளையிடும் கருவி மற்றும் மின் உபகரணங்களை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் 28 ,55,48, 43, வயதுடை யவர்கள் எனவும் இவர்கள் அம்பாறை மத்தியமுகாம் 11 ஆம் கொலனி, மட்டு புதுக்குடியிருப்பு, வவுணதீவு கண்ணகிபுரம், போர தீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தப்பி ஓடிய பிரதான சூத்திரதாரி கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# பொது இடங்களில் முகக்கவசம் அணிவது இனிக் கட்டாயமில்லை

இலங்கையில் நேற்றுமுன்தினம் முதல் உடன டியாக அமுலுக்கு வரும் வகையில் பொது போக் குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகளின் போது முகக்கவசம் அணிவதை தவிர, பொது இடங் களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என புதிய சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன அறிவித்துள்ளார்.



# 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் வரவுள்ளது போதியளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளதாம்!

40 மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பல் ஒன்று எதிர்வரும் இரண்டு நாள்களில் நாட்டை வந்தடையும் என இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடனுதவியின் கீழ் குறித்த எரி பொருள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இதேவேளை நாட் டில் போதுமான அளவு பெற்றோல் கையிருப்பு இருப்பதாகவும் சுமித் விஜேசிங்க கூறியுள்ளார்.

# இலங்கையின் உயர்மட்டத்தில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன

## அமெரிக்கா குற்றச்சாட்டு

இலங்கையின் உயர்மட்டத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு எதிரான பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் நட வடிக்கை எடுக்கவில்லை எனவும் அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் இராணுவ அதிகாரிகளை விடுதலை செய்தல், உயர் பதவிகளுக்கு பதவி உயர்வு வழங்குதல் உள்ளிட்ட பல சம்பவங்களுக்கு இலங்கை மீது அமெரிக்க அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள மிக மோசமான அறிக்கை இதுவாகும் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. 30 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் பாதாள உலகக் கும்பல் எனப்படும் 8 பேரை பொலிஸார் கொன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொஸ்கொடதாரகஉறுஜுவபோன்றவர்களின் பெயர்களும் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளன. குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்புப் படை யினரை விடுவித்தமை தவறு என்றும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொட்டகலையில் அமைதியின்மை பொலிஸார் - மக்கள் முறுகல்நிலை





எரிவாயு சிலிண்டரை வழங்கக் கோரி ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கொட்டகலை பிரதேச மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பி எதிர்ப்பை வெளியிட்டனர். எரிவாயு சிலிண்டர்களை வீதியில் வைத்து எரிவாயு பிரச்சினைக்குத் தீர்வு கோரினர்.

இதன் போது நுவரெலியா பகுதிக்கு காஸ் எடுத்துச் சென்ற காஸ் லொறியை மறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் காஸ் வழங்கக் கோரி கோஷமிட்டனர். இதனையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அந்த லொறியை சுற்றி வளைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தமக்கு எரிவாயு விரைவில் விநியோகிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இதனையடுத்து திம்புள்ள – பத்தனை பொலிஸார் அங்கு விரைந்து காஸ் லொறியில் இருந்த காஸ் சிலிண்டர்களில் 60 காஸ் சிலிண்டர்களை மாத்திரம் இறக்கி போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களுக்கு வழங்கினர்.

சுமார் 2 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதால் நுவரெலிய – ஹற்றன் வீதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அதேபோல் மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்ற வாகன சாரதிகளும் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இனவாதக் கருத்துக்கு ஏமாந்து மக்கள் இனி அடிபணியமாட்டார்கள்

### கிண்ணியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

திருகோணமலை, ஏப். 20

இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்கள் இனிமேல் ஒருபோதும் இனவாத கருத்துக்களுக்கு அடிபணிந்து ஏமாந்து போகத் தயாரில்லை என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம். நசுருதீன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகக் கோரி காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் தொடரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தை, நாட்டை முடக்கி இனவாதக் கருத்துக்களைத் தூண்டி மக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி மழுங்கடிக்கச் செய்வதில் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

அன்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிகானை வீட்டுக்கு முன்பாக மக்கள் எழுச்சி நடைபெற்றபோது அராபிய வசந்தம் என்ற சொற்பிரயோகம் பாவிக்கப்பட்டதால் இது முஸ்லிம் அடிப்படைவாதிகளின் செயல் என ஜனாதிபதி செயலக ஊடக அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தது.

அதேபோன்று காலிமுகத்திடலில் நடைபெற்று வருகின்ற மக்கள் எழுச்சி போராட்டத்தின்போது கலந்துகொண்ட முஸ்லிம் மக்கள் நோன்பு திறப்பதையும் தொழுகையில் ஈடுபடுவதையும் அவதானித்த ஞானசார தேரர் இங்கே வகாபிசம் போன்ற தீவிரவாத அமைப்புகள் களம் இறங்கியிருக்கிறார்கள் என்று இனவாதக் கருத்துக்களைத் தூண்டி இந்த மக்கள் எழுச்சி போராட்டத்துக்கு இனவாத சாயம் பூசி மழுங்கடிப்பதற்கான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் மக்கள் 'கோட்டா கோகோம்' என்ற மகுட வாசத்தின் கீழ் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் இலங்கையர் என்ற ஒரே நாமத்தின் கீழ் மிகப்பலமாகக் கைகோர்த்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்வெட்டு, எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருள்கள் அனைத்துக்குமான விலையேற்றமும் தட்டுப்பாடும் அனைத்து மக்களையும் வீதிக்கு இறக்கி அரசாங்கத்துக்கு எதிராகப் போராட வைத்துள்ளது.

ராஜபக்ஷவின் ஊழல் மோசடியை அறிந்த மக்கள் இன்று ராஜபக்ஷக்கள் நாட்டை விட்டு வெளியேறுமாறு கோஷம் எழுப்பிக் கொண்டிருக்கின்ற காட்சியைக் காண்கின்றோம்.

தற்போது நாட்டு மக்கள் பசி, பட்டினியால் கஷ்டப்படுவதையும் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் வரிசையாக நின்று கஷ்டப்படுவதையும் அரசாங்கம் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் பதிலாக வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறது.

இனவாதக் கருத்துக்களைப் பரப்புவது வேடிக்கையாக இருக்கிறது, இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்கள் இனிமேல் ஒருபோதும் இனவாதக் கருத்துக்களுக்கு அடிபணிந்து ஏமாந்து போகத் தயாரில்லை.

'கோட்டா கோகோ' என்ற குடையின் கீழ் பௌத்தம், இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம் என்ற இன மத மொழிகளுக்கு அப்பால் இலங்கையர் என்ற உணர்வோடு ஊழல் மோசடிக்கு எதிராக நாட்டின் எதிர்கால நலனுக்காகப் பலமாக கை கோர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை வான் கட்டணங்களும் அதிகரிக்கப்படுவதாக அறிவிப்பு!

பாடசாலை வான் கட்டணத்தை 1, 000 ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை வான் இயக்குநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திங்கட்கிழமை முதல் பெற்றோலின் விலையை அதிகரித்ததன் காரணமாகவே இந்த நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

டீசல் இல்லாததால் சேவையைத் தொடர்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

எரிபொருள் நிரப்ப நீண்ட நேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது,

இது மதிப்புமிக்க நேரத்தை வீணடிக்கும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது உண்மையில், கட்டணங்களை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அகில இலங்கை பாடசாலை வான் இயக்குநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## கொரோனாத் தொற்றால் மேலும் ஒருவர் சாவு!

நாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொரோனாத் தொற்று காரணமாக ஒரே ஒரு மரணம் மாத்திரம் பதிவாயுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 496 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மத்திய கல்லூரிக்கு பழைய மாணவர்களால் பஸ்!

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு பழைய மாணவர்களால் அதிநவீன வசதிகளுடன் கூடிய பஸ் ஒன்று நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பாவனைக்காக இன்று 76 லட்சம் ரூபா பெறுமதியான அதி நவீன பஸ் ஒன்று பாடசாலையின் பழைய மாணவர்களால் கட்டமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பேருந்து குழுமம் என்ற அமைப்பினரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) வழங்கிவைக்கப்பட்டது.

பஸ்ஸை சம்பிரதாயபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு காலை கல்லூரியின் சிரேஷ்ட பழைய மாணவரான முகமட் ஜெமில் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கலாநிதி எழில் வேந்தன், பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் பல் துறைசார் தொழில்துறைகளில் இருந்துவரும் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்ட யாழ்.மத்திய கல்லூரி 90 களுக்கு முன்னர் வடபகுதியில் பஸ் ஒன்றை தன்னகத்தே கொண்டிருந்த ஒரே ஒரு பாடசாலையாகக் காணப்பட்டது.

அதன் பின்பு 90 களின் பிந்தைய காலத்தில் நாட்டில் காணப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளால் பஸ் வசதியை பெறுவதில் சவால்களையும் அவற்றை பராமரிப்பதில் இடையூறுகளையும் பாடசாலை சந்தித்து வந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு இந்த வரையறுக்கப்பட்ட பேருந்து குழுமம் என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.




இதன் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளில் பாடசாலையின் கனவு நனவாக்கப்பட்டு அது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. படசாலையின் அடிப்படை தேவைகளுள் பஸ்ஸூம் அவசியமானதொன்று. அந்தவகையில் எதிர்பார்த்த கனவு நனவாகியுள்ளது.

## குற்றவாளிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

-இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் -

நாட்டு மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு வேண்டிய போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். மக்கள் பொருளாதார ரீதியில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு கஷ்டப்பட்டு வருகின்றனர். மக்களின் வாழ்வாதாரம் பாரியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

எனவே, மக்களின் போராட்டம் நியாயமானது.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இவ்வாறான கொடூர செயல்களில் ஈடுபட்டுள்ளமையானது அவர்கள் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. அரசு போராட்டக்காரர்களை அடக்குவதற்கு கொடுக்கும் முக்கியத்துவம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமையை மீள்கட்டியெழுப்பக் கொடுக்கவில்லை என்பது அவர்களின் தற்போதைய செயல்களில் அறியமுடிகின்றது.

நாட்டு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்தர்களின் குடும்பத்தினருக்கு இ.தொ.கா. ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தச் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரம்புக்கனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் நேற்று மோதல் ஏற்பட்டது. இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்களில் இளைஞர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் 8 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 24 பேர் காயமடைந்தனர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

இதையடுத்துப் ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றிரவு 8.30 மணிமுதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பொதுமக்கள் அமைதியாக வீடுகளில் இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றிரவு முழுவதும் ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்மா அதிபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

றம்புக்கணையில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்கும் போது பொலிஸார் அதிக பலத்தைப் பிரயோகித்தனரா என்பது தொடர்பில் பொலிஸ் தலைமையக மட்ட விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## குவிகின்றன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் மற்றும் உள்நாட்டு சிவில் சமூகமும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

ரம்புக்கனையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் வலியுறுத்தியுள்ளார்.

ரம்புக்கனையில் இருந்து வெளியாகும் செய்தியால் தான் மிகவும் வருத்தமடைந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர், அமைதியான போராட்டத்துக்கான மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் இதனைத் தனது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

கல்வீச்சுத் தாக்குதலுக்குப் பதில் துப்பாக்கிச்சூடா பொலிஸ்மா அதிபரே? ரம்புக்கனைத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மக்கள் வன்முறையில் ஈடுபட்டால், சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தால் அவர்களைக் கைதுசெய்யலாம், அவர்கள் மீது சூடு நடத்த வேண்டியதில்லை. இது ஜனநாயகமா? இதுதான் நாட்டின் சட்டமா? இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.நா., ஐ.நா. மனித உரிமைகள் சபை, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட மேலும் பல அமைப்புகள், அமைதியான போராட்டங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

## பொலிஸார் வெறியாட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து ரம்புக்கனையில் நேற்றுக் காலை முதல் மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ரயில் மார்க்கத்துக்கும் தடை ஏற்படுத்தப்பட்டது. இதனால் ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன. எரிபொருள் பவுசர் ஒன்றையும் மக்கள் தடுத்து நிறுத்தினர்.

போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். எனினும், போராட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. இதையடுத்து நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பதிலுக்குப் போராட்டக்காரர்களும் கல்வீச்சுத் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். இதனால் ரம்புக்கனைப் பகுதி போர்க்களமாக மாறியது.

இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். இதில் ஒருவர் சம்பவ இடத்தில் பலியாகினார். மேலும் மூவர் வைத்தியசாலையில் படுகாயங்களுடன் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 24 பேர் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 8 பேர் பொலிஸ் அதிகாரிகளாவர்.

மக்கள் மேற்கொண்ட கல்வீச்சுத் தாக்குதலிலேயே 8 பொலிஸார் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## அரசை எதிர்த்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமை தாங்கினார்.

கடந்த 17ஆம் திகதி களுத்துறை - பேருவளையில் ஆரம்பித்த இந்தப் பேரணி மொரட்டுவை, காலி வீதியூடாக வெள்ளவத்தை, பாமன்கடை , ஹெவ்லொக் பகுதிகளின் ஊடாக நேற்றுக் கொழும்பை வந்தடைந்தது.

தற்போதைய அரசின் பொருளாதாரக் கொள்கை, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் , இளைஞர் அணிகள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பெருமளவில் இந்த எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஓட்டோ சாரதிகள் நேற்று முன்னெடுத்த போராட்டம் காரணமாக இராஜகிரிய, பத்தரமுல்லை, பெலவத்தை, கோட்டே முதலான பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரச எதிர்ப்புப் போராட்டம் காரணமாக ஹட்டன் நகரின் இயல்புநிலை நேற்று பாதிப்படைந்தது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹட்டனில் உள்ள வாகன சாரதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் டிக்கோயா நகரிலும் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. கொட்டக்கலை நகரில் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் போக்குவரத்து பாதிப்படைந்தது.

பலாங்கொடை நகரிலும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பஸ்களைத் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதேவேளை, இரத்தினபுரி நகரிலும் வாகன சில்லுகள் எரிக்கப்பட்டு நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பதுளை மாவட்டத்தில், அப்புத்தளை, தியத்தலாவை, பெரகல மற்றும் பண்டாரவளை நகரங்களில் பிரதான வீதிகளை இடைமறித்து பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹப்புத்தளையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களால், சுற்றுலா ரயில் ஒன்று நேற்று வழிமறிக்கப்பட்டது.

கண்டியில் இருந்து எல்ல நோக்கிப் பயணித்த சுற்றுலா ரயில் வழிமறிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாரும் ரயில் நிலைய அதிகாரிகளும் மக்களுடன் பேச்சு நடத்தினர். அதன்பின்னர் ரயில் விடுவிக்கப்பட்டது.

இதேவேளை, ஏ - 9 வீதியில், வவுனியா மூன்று முறிப்பு பகுதியில், பஸ் பணியாளர்கள் பஸ்களை வீதியின் குறுக்காக நிறுத்திப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அநுராதபுரம், சிலாபம், கட்டுநாயக்க உள்ளிட்ட பல பகுதிகளிலும் அரசுக்கு எதிராக நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## 21ஆவது திருத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட ஆறு மாத காலம் கூட சராசரியாக பிடிக்கும்.

ஆனால் வழமைக்கு மாறாக, இவ்விடயத்தை ஒட்டி நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தம் செய்யும் தீர்மானமொன்றை நாடாளுமன்ற மேற்கொண்டு, அதன் கீழ் இவ்விடயத்தைக் கையாண்டால் இந்தப் பிரேரணையை ஆறு வார காலத்துக்குள் சட்டமாக்கிவிட முடியும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, இந்தப் பிரேரணையைவிசேடமாககையாள்வதற்கான தீர்மானமொன்றை எடுப்பதற்கு உரிய பெரும்பான்மை இவ்விடயத்தில் எதிரணிக்குக் கிட்டுமானால் ஆறு வார காலத்தில் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியம் உண்டு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

20 ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட கட்டுமட்டில்லா அதிகாரங்களைத் திரும்பப்பெற்று, 19 ஆவது திருத்த ஏற்பாடுகளை மீளக் கொண்டு வருவதற்கான 21 ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணை ஒன்றை விரைவில் தாமே அமைச்சரவையில் முன்மொழிவார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கையில், அதற்கு மாறாக எதிரணி தன் பாட்டிலேயே இது தொடர்பான 21 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கான பிரேரணையைத் தன்பாட்டில் கொண்டுவர முயல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

## நல்லாட்சி அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம் போராட்டக்காரர்களுக்குத் துப்பாக்கிகளால் பதிலளிக்கவும் இல்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ரம்புக்கனை போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் நால்வர் கொல்லப்பட்டதுடன் மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

2015ஆம் ஆண்டு நான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டது முதல் எனது பதவிக்காலம் முடிவடையும் வரையில் எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு நான் அனுமதிக்கவில்லை. அதேபோன்று போராட்டக்காரர்களுக்கு துப்பாக்கியால் பதிலளிக்கவும் முற்படவில்லை.

நிராயுதபாணிகளுக்குத் தோட்டாக்களை நான் பரிசளிக்கவும் இல்லை. ஆகவே, ரம்புக்கனையில் நேற்று இடம்பெற்ற சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும் - என்றார்.

## இலங்கைக்கு உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர் கிறிஸ்லர்லினா ஜோர்ஜீவாவுக்கும் இந்திய நிதி அமைச்சருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு உதவுவதற்கு வெளிநாடுகள் மட்டுமன்றி சர்வதேச அமைப்புகளும் தேவை என திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியம், இந்தியாவின் இலங்கைக்கான உதவிக்காகப் பாராட்டியுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்லேர்னியா ஜோர்ஜிவா இலங்கைக்கு உடனடி நிதி உதவி வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

இந்திய நிதி அமைச்சர் மற்றும் இலங்கை நிதி அமைச்சர் அலி சப்ரிக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வொஷிங்டனில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.